**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No.139 /2021**
**U/s. 341, 294(b), 324, 506(2)**
**PROSECUTION WITNESS NO.1 (LW. 1)**

| | |
|---|---|
| **Name** : முருகன் | |
| **Father's/Husband Name :** | **Occupation** : |
| **Address** : | **Age** : **/2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. N. புஷ்பராணி, இளநிலை உதவியாளர், திரு. ராஜவேல், சுருக்கெழுத்து தட்டச்சர்.**

**<u>C.C.No. 139/2021 11.07.2025</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 03.15 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

**1.** நான் தஞ்சாவூர் அண்ணா நகரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 07.10.2022 அன்று காலை 07.10 – 07.30 மணியளவில் விளார் ரோட்டில், 10வது தெருவில் சென்று கொண்டிருந்தபோது, ராஜா என்பவருக்கும் எனக்கும் குடும்ப பிரச்சினை இருந்ததை மனதில் வைத்துக்கொண்டு, ராஜாவின் மனைவி பிரிந்து போய்விட்டதால் அதற்கு நான்தான் காரணம் என்று அடிக்கடி சண்டை போடுவார். ஆஜர் எதிரி என்னை வழிமறித்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, கையில் வைத்திருந்த கத்தரிக்கோலால் என்னை வலது மார்பில் தாக்கினார். நான் வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டேன். அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் என்னை தூக்கிவிட்டனர். எதிரி அங்கிருந்து அவரது வீட்டிற்கு ஓடிவிட்டார். நான் அவர் வீட்டிற்கு சென்று அதுபற்றி கேட்டபோது அவர் கையில் வைத்திருந்த அருவாளால் என் தலையில் வெட்டவந்தார். நான் எனது கையால் தடுத்தேன். எனது இடது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. எனது பெரிய அண்ணன் ஓடிவந்தார். பெரிய அண்ணன் பெயர் கிருஷ்ணகுமார். அவர் எதிரியை விலக்கிவிட்டார். என்னை வினோதன் மருத்துவமனையில் சேர்த்தார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அசாஆ.1 ஆகும்**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை 07.10.2022 அன்றே என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரியின் மனைவி எனக்கு சித்தி ஆவார். எனது சித்தி ஆஜர் எதிரியுடன் கோபித்து கொண்டு அவரது வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் அவரது மகள் மன்னார்குடியில் வேலை பார்த்து

வருகிறார். அவரது வீட்டிற்கு சென்றுவிட்டார். இதுகுறித்து நான் ஆஜர் எதிரியிடம் கேட்டு நான் அவரை கீழே தள்ளிவிட்டேன் என்றாலும், அருகிலுள்ளவர்கள் அவரை சமாதானம் செய்து அவரது வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. குமார் என்பவர் என் உடன்பிறந்த சகோதரர் ஆவார். நானும் குமாரும் ஆஜர் எதிரி வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். நான்தான் ஆஜர் எதிரியை கட்டையால் அவரது கையில் அடித்தேன் என்றாலும், அவர் தஞ்சை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக ஆஜர் எதிரி என் மீது வழக்கு போட்டார் என்றால் சரிதான். மருத்துவரிடமும் ஆஜர் எதிரி என்னை வலது மார்பில் கத்தரிக்கோலால் குத்தியதாக சொன்னேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் எனது இடது கையில் காயம் ஏற்பட்டது குறித்து சொன்னேன். எனக்கு சம்பவ சமயத்தில் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றாலும் அப்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நானே தன்னிச்சையாக காயம் ஏற்படுத்திக்கொண்டு ஆஜர் எதிரி உண்டாக்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் ஆஜர் எதிரியின் வீடு என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியின் வீட்டிற்கு முன்பாக நடந்தது. நான்தான் ஆஜர் எதிரி வீட்டிற்கு தேடி சென்று சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. எனது சித்தி எங்களுடன் தான் வசித்து வருகிறார் என்றால் இல்லை. அவரது மகளுடன் மன்னார்குடியில் இருக்கிறார். எதிரி பலமுறை அவரது மனைவியை சேர்த்து வைக்கும்படி என்னிடம் கேட்டார் என்றாலும், நான்தான் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது சித்தி ஆஜர் எதிரியை மன்னார்குடிக்கு அழைத்தும் அவர் செல்லவில்லை. ஆஜர் எதிரி இதுகுறித்து கேட்க வரும்போதெல்லாம் நான்தான் அவரை அடித்து அனுப்புவேன் என்றால் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No.139 /2021**
**U/s. 341, 294(b), 324, 506(2)**
**PROSECUTION WITNESS NO.2 (LW. 4)**

| | |
|---|---|
| **Name** : முனியாண்டி | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address :** | **Age : /2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. N. புஷ்பராணி, இளநிலை உதவியாளர், திரு. ராஜவேல், சுருக்கெழுத்து தட்டச்சர்.**

**<u>C.C.No. 139/2021 11.07.2025</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 03.30 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

**1.** நான் தஞ்சாவூர் சண்முகநாதன் நகரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது. **அந்த கையெழுத்து அசாஆ.2 ஆகும்**. கடந்த 12.10.2022 அன்று மாலை 05.00 மணிக்கு சம்பவம் நடந்தது தொடர்பாக வரைபடம் வரைந்ததாகவும், அதில் சாட்சியாக இருக்கும்படி என்னையும், குபேந்திரனிடமும் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் இல்லை. போலீசார் யார் சண்டை போட்டார்கள் என்று என்னிடம் கேட்டார்கள். வரைபடம் வரைந்தது சம்மந்தமாக கையெழுத்து கேட்டார்கள்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No.139 /2021**
**U/s. 341, 294(b), 324, 506(2)**
**PROSECUTION WITNESS NO.3 (LW. 5)**

| | |
|---|---|
| **Name** : குபேந்திரன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. N. புஷ்பராணி, இளநிலை உதவியாளர், திரு. ராஜவேல், சுருக்கெழுத்து தட்டச்சர்.**

**<u>C.C.No.139/2021 11.07.2025</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 03.37 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

**1.** நான் தஞ்சாவூர் காந்திஜி ரோட்டில் குடியிருந்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையெழுத்து அசாஆ.3 ஆகும்**. கடந்த 12.10.2022 அன்று மாலை 05.00 மணிக்கு பர்மா காலனி 10வது தெருவில் நானும் முனியாண்டியும் சென்றுகொண்டிருந்தோம். தெற்கு காவல்நிலைய ஆய்வாளர் வரைபடம் வரைந்து விசாரித்துக்கொண்டிருந்தார். நான்கு நாட்களுக்கு முன்பு நடந்த சண்டை சம்மந்தமாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நானும், முனியாண்டியும் அதில் கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.